பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 23 புதன்கிழமை 09.10.2024 கதிர் 336

## இது ரகசியம் அல்ல!

இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் அரசுக் கட்சிக்குள் மட்டுமல்ல எல்லாத் தமிழ் கட்சிகளுக்குள்ளும் குழப்பங்கள்தான். சுரேந்திரன் மற்றும் ☞ 2

# பாடசாலை மாணவர் மனநலன் மீது அதிக அக்கறை செலுத்தவேண்டும்

### பிரதமர் ஹரினி தெரிவிப்பு

தற்போதுள்ள கல்வி முறை, சம்பந்தப்பட்ட துறைகளில் உருவாக்கப்பட்டுள்ள போட்டி மற்றும் கல்வியில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் காரணமாக பாடசாலை மாணவர்களின் மனநலம் பெரும் பிரச்சினையாக மாறியுள்ளது என பிரதமர் மற்றும் கல்வி அமைச்சர் ஹரினி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், சமூகம், சமூகம் மற்றும் குடும்பங்களுக்குள் மாணவர்களின் மன ஆரோக்கியத்தில் தலையிட்டு பாதுகாப்பதற்கான வழிகளைக் கண்டறியும் அதேவேளையில், மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சரியான முறைமை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார்.

தற்கொலைகள், தற்கொலை முயற்சிகள் மற்றும் சுய தீங்கு போன்ற சம்பவங்கள் நாட்டில் அதிகரித்து வருகின்றன, இந்த நிகழ்வுகள் தினசரி அறிக்கையிடப்படுகின்றன. பள்ளிகளையோ, ஆசிரியர்களையோ, பெற்றோரையோ குறைகூறுவது எளிதல்ல. குற்றங்களைச் சுமத்துவதற்குப் பதிலாக, குழந்தைகளை இத்தகைய மன அழுத்தத்திற்கு உள்ளாக்கும் அடிப்படைக் காரணங்களில் கவனம் செலுத்த வேண்டும். ☞ 2

# ஜனநாயகக் கூட்டணி கட்சி இன்று வேட்புமனு தாக்கல்

### திருமலை தவிர்த்து தனித்துப் போட்டி

2024 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணி இன்று தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்கின்றது.

ரெலோ, புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ஜனநாயகப் போராளிகள் கட்சி, தமிழ்த் தேசியக் கட்சி ஆகியவை ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற பெயரில் ☞ 2

# ஏகோபித்த அங்கீகாரத்தை தந்தால் தீர்வைப் பெறும் பணி இலகுவாகும்

### இப்படிச் சொல்கிறார் கஜேந்திரன்

வடக்கு கிழக்கில் இருந்து எமது கட்சிக்கு ஏகோபித்த அங்கீகாரம் வழங்கப்படுவதன் மூலம் எமது இனப்பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் பணியை நாம் மேற்கொள்ள இலகுவாக இருக்கும் என ☞ 2

# நாடாளுமன்றம் இனிமேல் நறுமண பூந்தோட்டமாகும்

### தேசிய மக்கள் சக்தி உறுப்பினர் நம்பிக்கை

இதுவரை ஊழல்வாதிகளால் நிரம்பிய பாராளுமன்றம் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் நறுமணம் வீசும் பூக்களின் பகுதியாக மாறும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் நளின் ஹேவகே தெரிவித்தார்.

நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார்.

மற்ற அரசியல் கட்சிகளின் கொடிகளை ஏந்தியவர்கள் இந்தமுறை தேர்தலில் போட்டியிடவில்லை. ஏனென்றால் அவர்களால் கிராமத்திற்குச் சென்று பிச்சை எடுக்க முடியாது. தேர்தலில் அவர்கள் போட்டியிட்டால் கண்டிப்பாக பாய், தலையணையுடன் வீட்டிற்குத்தான் செல்ல வேண்டும். ☞ 2

# ராஜபக்ச ஆட்சிக்கால ஊழல் குறித்த விசாரணை ஆரம்பம்

ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இடம் பெற்ற அனைத்து ஊழல் மோசடிகள் தொடர்பிலும் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தேசிய மக்கள் சக்தியின் தேசிய செயற்குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

செய்தியாள்களிடம் பேசிய அவர், கடந்த ஆட்சியில் சர்ச்சையை ஏற்படுத்திய அனைத்துக் குற்றச்சாட்டுகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசு விசாரணையைத் தொடங்கி இரண்டு வாரங்கள் ஆகிவிட்டது. எதிரிகள் கலக்கமடைந்துள்ளனர். பிணைமுறி ஊழல், ஈஸ்டர் தாக்குதல், லசந்த விக்ரமதுங்க கொலை, தாஜுதீன் கொலை, எக்னெலிகொட காணாமல் போனமை, 11 தமிழ் இளைஞர்கள் காணாமல் போனமை, கப்பலுக்கு மலஜலம் கொடுப்பது, எயார்பஸ் பேரம், விசாரணைகள் தொடர்பில் கவலைப்பட வேண்டாம் என கூற விரும்புகின்றோம். இந்த விசாரணைகள் தொடங்கிவிட்டன.

உகாண்டாவை பார்த்து துபாய் கணக்குகளில் பணம் எப்படி மாற்றப்பட்டது என்பதை கண்டுபிடிக்க மாட்டோம் என நாமல் ராஜபக்ச நினைக்கிறார். அதனால்தான் ராஜபக்சேவின் திருமணங்களுக்கு உகாண்டாவில் இருந்து விமானம் எடுத்துச் செல்லும்போது, ☞ 2

# 246 சுயேச்சைகள் இம்முறை களத்தில்

2024 நவம்பர் 14 நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்காக மொத்தம் 246 சுயேச்சைக் குழுக்கள் பணம் கட்டியுள்ளன என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. அதில் மட்டக்களப்பு, யாழ்ப்பாணத்தில்தான் அதிக சுயேச்சைகள் போட்டியிடவுள்ளன.

தேர்தலில் போட்டியிடுவதற்காக இந்த சுயேச்சைக் குழுக்கள் செப்டம்பர் 25 முதல் ஒக்டோபர் 8க்கு இடையில் தங்கள் வைப்புத் தொகையைச் செய்தன.

மட்டக்களப்பு (22), யாழ்ப்பாணம் (22), திகாமடுல்ல (37), திருகோணமலை (17) மற்றும் கொழும்பு (17) ஆகிய ☞ 2

# பிரிக்ஸ் உறுப்புரிமைபெற இலங்கை முயற்சிக்கிறது

### அமைச்சர் விஜித ஹேரத் தகவல்

பிரிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்ள ஜனாதிபதிக்கு அழைப்பு கிடைத்துள்ளது. ஆனால் அவர் அதில் கலந்துகொள்ளமாட்டார். பிரிக்ஸ் உறுப்புரிமையைப் பெறுவதற்கு இலங்கை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இந்தியாவின் ஆதரவையும் அதற்குக் கோரியுள்ளது என்று வெகுஜன ஊடகத்துறை, புத்தசாசன, மத கலாசார அலுவல்கள், தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சர், அமைச்சரவைப் பேச்சாளர்; விஜித ஹேரத் தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். இங்கு தொடர்ந்தும் உரையாற்றியபோது தெரிவித்ததாவது:

எமது நாட்டில் சம்பிரதாயம் ஒன்று உள்ளது. புதிய ஜனாதிபதி நியமிக்கப்பட்டவுடன் அயல்நாடான இந்தியா அதன் இராஜதந்திர உறவுகளை பலப்படுத்தும் நோக்கில் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் ☞ 2



# உர மானியம் அடுத்த வாரம்

உர மானியப் பணம் அடுத்தவாரம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படும் என விவசாய அமைச்சின் செயலாளர் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஒரு ஹெக்டேயருக்கு 15,000 ரூபாய் என்ற அடிப்படையில் இந்த உரமானியம் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இந்த மானியத்தில் நெல் சாகுபடிக்கு மண் உரம் வாங்கலாம்.

இதேவேளை, மீனவர்களுக்கு எரிபொருள் மானியம் வழங்குவதற்குத் தேவையான தகவல்கள் தற்போது சேகரிக்கப்பட்டு வருகின்றன.

இதன்படி ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்க்கு 25 ரூபாய் மானியமும், ஒரு லீற்றர் டீசலுக்கு 25 ரூபாய் மானியமும் வழங்கப்படும் என அவர் தெரிவித்தார்.

மீனவர்களின் தகவல்களை சேகரித்து மிகவிரைவில் மானிய தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை, ☞ 2

# யானை சின்னத்தில் இ.தொ.கா போட்டி

2024 பொதுத் தேர்தலில் -நுவரெலியா மாவட்டத்தில் யானை சின்னத்தில் போட்டியிட முடிவுசெய்துள்ளதாக இ.தொ.கா அறிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன், தேசிய அமைப்பாளர் ப.சக்திவேல் ஆகியோர் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடவுள்ளனர்.

இதேவேளை, கட்சியின் பிரதித் தலைவர் கணபதி கனகராஜை தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களில் கூட்டணியின் சிலிண்டர் சின்னத்தின் கீழ் போட்டியிடவும் இ.தொ.கா. தீர்மானித்துள்ளது.

# தட்டுப்பாடு இல்லை

நாட்டில் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு தற்போது தட்டுப்பாடு இல்லை என அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

உணவுப் பொருட்களின் இறக்குமதி தொடர்கிறது. சில நாடுகளில் நிலவும் இராணுவ மோதல்கள் அத்தியாவசிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு தடையாக இல்லை ☞ 2

### ஐ.நா. பேரவையில்

# மனித உரிமைகள் தீர்மானத்தை இலங்கை தொடர்ந்தும் எதிர்க்கும்

### தேசிய மக்கள் சக்தி ஆட்சியாளர்கள் முடிவு

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தை மேலும் ஒரு வருடம் நீடிப்பதற்குஎடுக்கப்படும் முயற்சிகளை கொழும்பு முழுமையாக எதிர்க்கும் என்று அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை ☞ 2

## இனி இது .....

சசிகலாவுக்கு வாய்ப்பு வழுங்கப்பட்டது குறித்து ரெலோவின் யாழ். மாவட்டக் கிளையினர் ஏற்கனவே கொதித்துப் போயுள்ளனர். அவர்கள் இருவருக்கும் எதிராகத் தாம் களத்தில் இறங்கி வேலை செய்வோம் என்று அவர்கள் கூறுகின்றனர்.

தமிழ் மக்கள் கூட்டணிக்குள் மணிவண்ணுக்கு எதிராகக் கட்சியின் மூத்தவர்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். முதலில் கட்சியின் வேட்பாளராக அருந்தவபாலனை முதன்மைப்படுத்த விக்னேஸ்வரன் முயன்றார். ஆனால் தானே மு-தன்மை வேட்பாளர் என்று அறிவிக்கப்படவேண்டும் என்று அவர் விதித்த நிபந்தனையை அடுத்து மீண்டும் அவரைக் கழற்றிவிட்டார் விக்னேஸ்வரன். அதன் பின்னர் இப்போது மணிவண்ணன் தரப்பினரே கட்சிக்குள் ஆதிக்கம் எடுத்துள்ளனர். நாடாளுமன்றத்திற்கு அவர்கள் தரப்பினரே வேட்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் அரசுக் கட்சியில் இருந்து கட்சி தாவிய, சசிகலாவின் ஆதரவாளரான உமாகரன் இராசையாவுக்கும் அங்கு வேட்பாளராகப் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மணிவண்ணன், பார்த்தீபன், செல்டன், சிற்பரன், ஜெனிட்டன், உமாகரன், மிதிலைச் செல்வி, கோகிலவாணி ஆகியோரின் பெயர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன. இதில் மிதிலைச் செல்வியும் தமிழ் அரசுக் கட்சியின் மகளிர் அணியிலிருந்து கட்சி தாவியவரே.

...............

தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்ட வேட்பாளர்களை இன்று இறுதி செய்யப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. வன்னி மாவட்டத்தில் முன்னர் வேட்பாளர்களாகப் போட்டியிட முன்வந்த சிலர் கடைசி நேரத்தில் பின்வாங்கிக் கொண்டதால் அங்கும் வேட்பாளர் பட்டியல் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டியுள்ளது. நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையுடன் வேட்புமனு தாக்கல் செய்வதற்கான காலம் முடிவடைவதால் வேட்பாளர் பட்டியலை எப்படியாவது இன்று இறுதி செய்யவேண்டியிருக்கும். தலைவர் பதவியில் இருந்து தான் விலகிவிட்டார் என்று சிறீதரனுக்கு கடிதம் அனுப்பிய மாவையர் இன்றைய கூட்டத்தில் கலந்துகொள்வாரா என்பதிலிருந்து அவரது கடிதம் நாடகமா இல்லை உண்மைதானா என்பது தெரிந்துவிடும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ராஜபக்ச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எப்படி வந்தார்கள், போனார்கள் என்று தேடுகிறார்கள். உகாண்டா மட்டுமின்றி அபுதாபியிலும் ராஜபக்சேவின் ஊழல்களை எல்லாம் தேடி வருகின்றனர். எனவே, திருடர்கள் செய்த திருட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகிறது -என்று

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்கள், பதின்மவயதினர் மற்றும் இளைய தலைமுறையினரின் தேவைகளை உணரக்கூடிய விரிவான மனநலச் சேவையை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாதது என பிரதமர் சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்தார்.

குழந்தைகளுக்கான அனாதை இல்லங்கள், தடுப்பு இல்லங்கள் மற்றும் மனநல மருத்துவமனைகளில் சுகாதார சேவைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை நாம் தேடவேண்டும்

கல்வி முறையில் தொழில்நுட்பத்தை உள்வாங்குவதற்கான கொள்கைகளை உருவாக்க வேண்டும்.

குழந்தைகளைப் பாதிக்கும் தற்போதைய மனநலப் பிரச்சினைகளுக்கு ஆளும்தரப்பு மட்டும் முழுப் பொறுப்பேற்க முடியாது. அரசு சாரா நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் கூட்டாக இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு பங்களிக்க வேண்டும் - என்றார்.

## நாடாளுமன்றம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த ஊழல் நிறைந்த நாடாளுமன்றத்தை 2024 தேர்தலுடன் மிகவும் சுத்தமான நறுமணம் வீசும் பூந்தோட்டமாக மக்கள் தயாராகி வருகின்றனர். இலங்கையில் ஒரு அற்புதமான நாடாளுமன்றத்தை இனி நீங்கள் பார்க்கலாம்.

இந்த தேர்தல் முடிந்தவுடன், வாழ்க்கைச் சுமையை கணிசமான அளவு குறைக்க சில பெரிய முடிவுகளை எடுத்து, செயல்படுத்தி வருகிறோம் - என்றார்.

## ஏகோபித்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் கஜேந்திரன் கோரியுள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடகிழக்கில் உள்ள 5 தேர்தல் மாவட்டங்களிலும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி போட்டியிடவுள்ளது. எமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்து வருகின்றோம்.

75 வருடங்களாக ஆட்சியில் இருந்தவர்கள் மக்களுக்காக எதையும் செய்யாத நிலையில் தற்போது ஒரு ஆட்சி மாற்றத்தினை மேற்கொண்டுள்ளனர். ஆனால் இவர்களும் கூட தமிழ் மக்களுக்காக எதையும் செய்யப் போவதில்லை.

2009 பிரபாகரன் தலைமையிலான உரிமைப் போராட்டம் நிறைவுற்றதும் தமிழ் தேசம் ஒரு ஆபத்தான நிலையில் உள்ளது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினால் தெளிவுபடுத்தப்பட்டு வருவதாலேயே தமிழ் தேசியம் இன்றும் உயிருடன் இருக்கின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் எமக்கு மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல் தொடர்பாக 15 தடவைகள் அங்கு சென்று உரக்கக் கூறியது எமது தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மாத்திரமே.

அத்தேடு கொழும்பிலோ வெளிநாட்டிலோ எமக்காக தூதுவர்களிடமோ, ஏனையவர்களிடமோ 13 தீர்வுக்கான ஆரம்பபுள்ளி அல்ல என்பதை அவரே வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் இனநல்லுறவு ஏற்படுத்தப்பட வேண்டுமானால் சமஷ்டியே தீர்வு என கூறும் ஒருவர் எமது தலைவர் மாத்திரமே.

மட்டக்களப்பு அம்பாறை மற்றும் ஏனைய மாவட்டங்களில் எமது மக்களுக்கான போராட்டங்களில் எமது தலைவர் முன்னின்று செயற்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டுள்ளார்.

மயிலத்தமடுவிற்கு கூட எமது தலைவர் வருகை தந்தபோது பௌத்த பிக்குவினால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. அங்கு சிங்கள மயமாக்கல் மேற்கொள்ள முயற்சித்த போது எமது தலைவர் முன்னின்று செயற்பட்டவர்.

வடகிழக்கில் இருத்து எமது அணிக்கு ஏகோபித்த அங்கீகாரம் வழுங்கப்படுவதன் மூலம் எமது இனப்பிரச்சினைக்கு தீர்வுபெற்றுக் கொடுக்கும் பணியை நாம் மேற்கொள்ள இலகுவாக இருக்கும்.

தென்தமிழ் ஈழம் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக மட்டக்களப்பில் போட்டியிடும் 8 வேட்பாளர்களுக்கும் உங்களது பூரண ஆதரவை வழுங்குமாறு கேட்டுக்கொள்வதுடன், போதைப்பொருள் வர்த்தகத்தில், மணல் கொள்ளையில் ஈடுபட்டவர்கள் ஒழிக்கப்பட வேண்டும் அதற்காக எமது அணிக்கு ஆதரவு வழுங்க வேண்டும் எமது இருப்பை பாதுகாக்க வேண்டும் என்றார்.

## பிரிக்ஸ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகை தருவார். அந்த அடிப்படையில் தான் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் இலங்கைக்கு வருகை தந்தார்.

இந்தப் பயணத்தின்போது இந்தியாவுக்குப் பயணம் செய்யுமாறு இலங்கை ஜனாதிபதிக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இந்தியப் பிரதமருக்கும் இலங்கை விஜயத்துக்கான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இது உறவுகளைப் பலப்படுத்தவதற்கான சந்திப்பாக அமைந்தது.

அதானி நிறுவனத்தின் திட்டம் உள்ளிட்ட இந்திய முதலீட்டிலான திட்டங்கள் குறித்து அமைச்சருடன் எவ்விதமான கலந்துரையாடல்களும் இடம்பெறவில்லை. ஏனென்றால் இது தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதொரு காலமாகும். அத்துடன் புதிதாக ஜனாதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ள காலமாகும். ஆகவே திட்டங்கள் தொடர்பில் எவ்விதமான புதிய தீர்மானங்களையும் எடுக்கவில்லை. திட்டங்களை நிறுத்துவதெனவும் தீர்மானிக்கவில்லை. புதிய திட்டங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் தீர்மானிக்கவில்லை. இக்காலத்தில் இத்தகைய எந்தவொரு திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதில்லை.

இந்த மாதத்தின் இறுதியில் ரஷ்யாவில் பிறிக்ஸ் மாநாடு நடைபெறவுள்ளது. பிறிக்ஸ் மாநாட்டில் உறுப்புரிமை இலங்கைக்கு இல்லை. தற்போது ஒன்பது நாடுகளே அதன் உறுப்புரிமையப்பெற்றுள்ளன. வெளிவிவகார அமைச்சின் அதிகாரிகள் குழுவொன்று பிறிக்ஸ் மாநாட்டில் கலந்துகொள்ளும். உண்மையில் இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ஜனாதிபதிக்கு அழைப்புக் கிடைத்துள்ளது. எனினும் அதில் ஜனாதிபதி பங்கேற்கமாட்டார்.

நாட்டில் தேர்தல் காலம் என்பதாலும், அரசின் சமகால நிலைமையிலும் அவர் அம்மாநாட்டில் பங்கேற்க மாட்டார். அதிகாரிகள் குழுவினரே பங்கேற்கவுள்ளனர். அதன்போது பிறிக்ஸ் உறுப்புரிமையை பெறுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்தபோது பிறிக்ஸ் உறுப்புரிமையைப் பெறுவதற்கான ஆதரவினை கோரியிருந்தோம் - என்றார்.

## மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பான எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை அரசு கடுமையாக எதிர்ப்பது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

உள்நாட்டு நடைமுறைகளின் ஊடாக நல்லிணக்கம் உள்ளிட்ட முக்கிய மனித உரிமைகள் விடயத்தில் நடவடிக்கை எடுக்க முடியும் என்று இலங்கை உறுதியாக நம்புகிறது என்று அமைச்சர் கூறினார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உறுதிப்பாட்டை புதிய ஆளும்தரப்பு அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளும். அது தொடர்பில் எமது தேர்தல் அறிக்கையிலேயே குறிப்பிட்டுள்ளோம்.

'மனித உரிமைகள் பேரவை மற்றும் வழக்கமான மனித உரிமைகள் பொறிமுறைகளுடன் இலங்கை தொடர்ந்து கூட்டுறவு மற்றும் அர்த்தமுள்ள கலந்துரையாடல்களில் ஈடுபடும்' என்று அமைச்சர் மேலும் கூறினார்.

## ஜனநாயகக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடுகின்றன. இந்தக் கூட்டணி திருகோணமலை தவிர, யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, அம்பாறை தேர்தல் மாவட்டங்களில் தனித்துப் போட்டியிடுகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் மட்டும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியுடன் கூட்டணியாக வீட்டுச் சின்னத்தில் களமிறங்குகின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனித்துப் போட்டியிடும் மாவட்டங்களில் வேட்பாளர் பட்டியல் இறுதியடைந்துள்ளன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் ஜெ. நவீந்திரா (வேந்தன்), ரெலோவின் பேச்சாளர் கு.சுரேந்திரன், சசிகலா ரவிராஜ், பா. கஜதீபன், சிவகுமாரன், ஜயனந்தன் (ஜனா) ஆகியோர் போட்டியிடுகின்றனர்.

திருகோணமலையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் களமிறங்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு 7 வேட்பாளர்களில் 3 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த மூறவர் பட்டியல் இறுதியானதும் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச்செயலாளரிடம் வழங்கப்படும் என்று தெரியவருகின்றது

## பிரிந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று சங்கம் கூறுகிறது.

தீபாவளி, கிறிஸ்மஸ், புதுவருட காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவிற்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர் சங்கத்தினருக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய உணவுப் பொருட்களை தட்டுப்பாடு இன்றி இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்குமாறு சங்கப் பிரதிநிதிகளுக்கு ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

## 246 சுயேச்சைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டங்களில் அதிகளவு வைப்புத் தொகைகள் உள்ளன.

இதற்கிடையில், மொத்தம் 17 அரசியல் கட்சிகளும் 16 சுயேச்சைக் குழுக்களும் இதுவரை தேர்தல் ஆணையத்திடம் வேட்புமனு தாக்கல் செய்துள்ளன.

## உர மானியம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 15ஆம் திகதி முதல் பெரும் போகத்திற்கான நீரை விடுவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

காலைக்கதிர்
ஆசிரியர்பீட
தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# அடுத்தகட்ட நகர்வு குறித்து அறிவிப்பேன் ; முன்னாள் எம்.பி. சரவணபவன் அறிவிப்பு

தமிழ்அரசுக்கட்சியின்தேர்தல்நியமனக்குழுவால் அறிவிக்கப்பட்ட வேட்பாளர் பெயர் பட்டியலில் உள்வாங்கப்படாதகட்சியின்முன்னாள்நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன், தனது அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து விரைவில் அறிவிப்பார் என்று தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவிருக்கும் நாடாளுமன்றத்தேர்தலில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் யாழ். தேர்தல் மாவட்டத்தில்போட்டியிடவிருக்கும்வேட்பாளர்களின் பெயர்கள் அக்கட்சியின் தேர்தல் நியமனக்குழுவால் ஞாயிற்றுக்கிழமை அறிவிக்கப்பட்டது.

அதன்படி யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களுக்கான வேட்பாளர்களாக எஸ்.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், எஸ்.சி.சி.இளங்கோவன், கேசவன் சயந்தன், சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இம்மானுவன் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோர் வேட்பாளர்களாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

இருப்பினும் அப்பெயர் பட்டியலில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, சசிகலா ரவிராஜ், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரவண பவன் உள்ளிட்டோரின் பெயர்கள் உள்வாங்கப் பட்டிருக்கவில்லை. இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கே.வி.தவராசா தமிழ் அரசுக் கட்சியிலிருந்து விலகுவதாக ஞாயிற்றுக்கிழமை அறிவித்தார்.

அதேபோன்றுதமிழ்அரசுக்கட்சியின்வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் உள்வாங்கப்படாததன் காரணமாக எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜனநாயக தமிழ்த்தேசியக் கூட்டணியின் சார்பில் சங்கு சின்னத்தில்யாழ்.மாவட்டத்தில்களமிறங்கப்போவதாக திங்கட்கிழமை அறிவித்த தமிழ் அரசுக்கட்சி உறுப்பினர் சசிகலா ரவிராஜ், வேட்புமனுவிலும் கையெழுத்திட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இம்முறை தமிழ் அரசுக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் உள்வாங்கப்படாமல் நிராகரிக்கப்பட்ட முன்னாள் நாடாளுமன்றஉறுப்பினர்சரவணபவனிடம்அவரது அடுத்தகட்ட நகர்வு என்னவென்று வினவியபோது, அதுகுறித்து விரைவில் தீர்மானமொன்றை அறிவிப்பதற்கு உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தார்.

அதேவேளை தமிழ் அரசுக் கட்சியின் தேர்தல் நியமனக்குழு கூடிய வேளையில், கடந்த தேர்தலின்போது நியமனக்குழுவால் இறுதிப்படுத்தப்பட்ட 17 பேரின் பெயர்கள் அடங்கிய பட்டியல்கட்சித்தலைவர்மாவைசோ.சேனாதிராசாவால் பொதுச்செயலாளர் பா.சத்தியலிங்கத்திடம்




கையளிக்கப்பட்டதாகவும், அதனைப் பெற்றுக்கொண்ட சத்தியலிங்கம் சுமந்திரனுடன்வெளியேசென்றதாகவும் சுட்டிக்காட்டிய சரவணபவன், அவர்கள் மீண்டும் உள்ளே வந்தபோது சிலரது பெயர்கள் வெட்டப்பட்டு, 17 பெயர்கள் 11 ஆகக் குறைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவித்தார்.

அத்தோடு அவ்வாறு பெயர் வெட்டப்பட்ட பெரும்பாலானோர் நடைபெற்றுமுடிந்த ஜனாதிபதித்தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை ஆதரித்தவர்களாவர் எனக் குறிப்பிட்ட அவர், பொதுத்தேர்தலில் களமிறங்கும் உறுப்பினர் கட்சியின் தேர்தல் நியமனக்குழுவில் அங்கம்வகிப்பது நியாயமான விடயமல்ல என்றும் விசனம் வெளியிட்டார். (05)

# காத்திருப்புக் காலமின்றி கண்புரை சத்திர சிகிச்சை

## வைத்திய நிபுணர் எம்.மலரவன் தகவல்



வடமாகாணத்தில் காத்திருப்பு பட்டியல் இன்றி கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும், 10 நாள்களுக்கு 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சைகளை முன்னெடுக்கவுள்ளதாகவும் யாழ். போதனா வைத்தியசாலை கண் வைத்திய நிபுணர் எம். மலரவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில் -

சர்வதேச பார்வை தினத்தினை முன்னிட்டு, யாழ். போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவில் 2 ஆயிரம் பேருக்கு கண்புரை சத்திர சிகிச்சை செய்யவுள்ளோம்.

யாழ். போதனா வைத்தியசாலையில் குறுகிய காலத்தில் கண்புரை சத்திர சிகிச்சை முகாமை நடத்துவதுஇதுமூன்றாவதுதடவை. வடமாகாணத்தில் இது நாலாவது தடவையாகும்.

இலங்கையில் மாத்திரம் இன்றி, சார்க் வலய நாடுகளில் கூட 'பேகோ' மூலம் இப்படியான சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்ததில்லை. வடக்கிலையே இவ்வாறான கண் புரை சத்திர சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன.

முதல்தடவைநாங்கள்1200சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டோம். அதுபோன்று கடந்த வருடம் இரத்தினபுரி வைத்தியசாலை நட்புறவு மன்றத்தின் ஏற்பாட்டில்'சர்வதேச பார்வைகள் தினம் - 2023' முன்னிட்டு ஐந்து நாள்களில் 1200 பேருக்கு சத்திர சிகிச்சை செய்தோம்.

இந்த முறை யாழ்.போதனா வைத்தியசாலை கண்ணியல் பிரிவு, வடமாகாணத்தில் உள்ள ஏனைய கண்ணியல் பிரிவுடன் இணைந்து 2ஆயிரம் கண்புரை சத்திர சிகிச்சையை ஐந்து, ஐந்து நாள்களாக 10 நாள்களுக்குள் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கடந்த 2021ஆம் ஆண்டு முதல் தனியார் - அரசாங்க நட்புறவு உதவிகளுடன் அலாக்க பவுண்டேசன், ஆனந்தா பவுண்டேசன் மற்றும் அசிஸ்ட்ஆர்.ஆர். நிறுவனம்ஆகிவற்றின்உதவியுடன் இந்த கண்புரை சத்திர சிகிசிச்சையை மேற்கொண்டு வருகிறோம்.

கடந்த வருடம் 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு சத்திர சிகிச்சை செய்துள்ளோம். இது வளர்ந்த நாடுகளுக்கு ஒப்பானது.

இந்த வருடம் இதுவரையிலான கால பகுதியில் யாழ் . போதனா வைத்தியசாலையில் மாத்திரம் 09 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டுள்ளோம். கிளிநொச்சி . வவுனியாவில் 05 ஆயிரம் பேருக்கு செய்துள்ளோம்.

வடமாகாணத்தில் இந்த வருடம் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்புரை சத்திர சிகிச்சையை மேற்கொள்ள திட்டமிட்டு இருந்தோம். ஆனால் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்குசெய்யமுடியும்எனநம்புகிறோம்.

இதன் நிறைவு விழா எதிர்வரும் 25ஆம் திகதி வடமாகாணஆளுநர்நா.வேதநாயகன்தலைமையில் நடத்தவுள்ளோம். அன்றைய தினம் ஆளுநரால் இரண்டு பிரகடனங்கள் வெளியிடப்படவுள்ளன.

வடமாகாணத்தில்கண்புரைசத்திரசிகிச்சைக்கான காத்திருப்பு காலம் பூச்சியமாக பேணுவது. அதாவது சத்திர சிகிச்சைக்காக பதிந்தால் ஒரு வார கால பகுதிக்குள் சத்திர சிகிச்சையை மேற்கொள்ளல் ஆகும். அதொரு சிறப்பான விடயமாக அமையும்.

யாழ்ப்பாணத்தில் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் காத்திருப்பு 2 வருடங்களுக்கு மேலாக இருந்தது. சத்திரசிகிச்சைக்குபதிந்தால்2வருடங்களின் பின்னரே சத்திர சிகிச்சை மேற்கொள்ள முடியும். சிலவேளைகளில் 4 வருடங்களுக்கு பின்னர் கூட சிலருக்கு சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

லண்டன் உள்ளிட்ட நாடுகளில் கூட காத்திருப்பு காலம் இன்றும் உள்ளது. காசு கட்டி செய்வதாக இருந்தாலும் கூட இந்த காத்திருப்பு காலம் உண்டு.

இந்தநிலையில்தான்வடமாகாணத்தில்காத்திருப்பு காலம் இல்லாது பதிந்தால் உடனடியாக சத்திர சிகிச்சையை மேற்கொள்ள கூடியவாறு இருக்கும். எதிர்வரும் 25ஆம் திகதி முதல் செயற்படவுள்ளோம்.

அதேவேளை இரண்டாவது பிரகடனமாக அனைத்து ஆரம்ப சுகாதார பிரிவுகளிலும், வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய சுகாதார திணைக்களத்தால் காத்திருப்பு காலம் இல்லாது உடனுக்கு உடன் கண்புரை சத்திர சிகிச்சையை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவுள்ளேனவே வடமாகாணத்தில் வசிக்கும் அனைத்து மக்கள் ஆகிய உங்களுக்கு கண்புரை இருக்கிறது அல்லது பார்வை குறைப்பாடுகள் இருப்பதாக உணர்ந்தால் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார வைத்திய நிலையத்திற்கோ அல்லது தள வைத்தியசாலைக்கோ அல்லது மாவட்ட வைத்திய

# பீடி இலைகளுடன் ஒருவர் நுரைச்சோலையில் கைது



பீடி இலைகளை கடத்த முற்பட்ட சிலர் தப்பியோடிய நிலையில், ஒருவர் ஞாயிற்றுக்கிழமை நுரைச்சோலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் நுரைச்சோலை இழந்தையடி கரையோரப் பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதானவர் கலேவெல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் இவரிடமிருந்து சுமார் 2500 கிலோ பீடி இலைகள், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி மற்றும் வான் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த பீடி இலைகள் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதியானவை எனக் கூறப்படுகிறது.

பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி, வான் ஆகியன கட்டுநாயக்க சுங்க திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.(05)

# இணையம் மூலம் மோசடி செய்த 40 வெளிநாட்டவர்கள் கைது

## கம்பஹாவில் சம்பவம்

கம்பஹாவில் உள்ள ஹோட்டல் மற்றும் ஹன்வெல்லவில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் இணையம் மூலம் மோசடி செய்த 40 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 30 சீனர்கள், 4 இந்தியர்கள் மற்றும் 6 தாய்லாந்து பிரஜைகள் அடங்குகின்றனர். .

தடயவியல் பரிசோதனைக்காக 499 மொபைல் போன்கள், 25 மடிக்கணினிகள் மற்றும் 29 டெஸ்க்டாப் கணினிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதி இன்றி அமைதி சாத்தியமில்லை

அரசுத் தலைவர் தேர்தலில் அநுரகுமார திசநாயக்க வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்திலும் அவர் தொடர்பான ஓர் எதிர்பார்ப்பு இளைஞர்கள் மத்தியில் எழுந்தது. தமிழ் அரசியலாளர்களின் போலித் தேசியம் சார் செயற்பாடுகளும் சமூகவிரோத நடவடிக்கைகளும் அவர்களுக்கு ஏற்படுத்திய வெறுப்பின் காரணமாகவும் இலஞ்ச, ஊழல் காரணமாக எழுந்த விரக்தி காரணமாகவும் அவர்கள் தேசிய மக்கள் சக்தியை உண்மையான ஒரு மாற்றாகப் பார்க்க விளைந்தார்கள். ஆனால், அதில் சம்மட்டி அடியாக விழுந்திருக்கிறது தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல் விவகாரங்கள் தொடர்பான கோட்டாபய ஆட்சியின் தீர்மானத்தைத் தொடர்வது என்ற தேசிய மக்கள் சக்தியின் முடிவு.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் தொடங்கியுள்ள நிலையில் இலங்கை தொடர்பாக 2 வருடங்களுக்கு முன்னர் அங்கு நிறைவேற்றப்பட்ட 51/1 தீர்மானம் தொடர்பான அறிக்கை விவாதத்திற்கு வருகின்றது. 2015இல் இலங்கை ஆட்சியாளர்களும் இணங்கி இணை அனுசரணை வழங்கி நிறைவேற்றிய 30/1 தீர்மானத்தின் தொடர்ச்சியே 51/1 தீர்மானம். மைத்திரி – ரணில் ஆட்சியில் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், 2019இல் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ஆட்சி அந்தத் தீர்மானத்தில் இருந்து விலகியது. இலங்கை தொடர்பான ஐ.நாவின் எந்தத் தீர்மானத்தையும் ஏற்கமுடியாது என்று அறிவித்தது.

அரகலய மக்கள் கிளர்ச்சியின் மூலம் கோட்டாபய விரட்டப்பட அவரது பொது ஜன பெரமுன கட்சியின் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்த ரணில் விக்கிரமசிங்கவும் ஐ.நாவில் கோட்டாபயவின் கொள்கையையே தொடர்ந்தார். அதன் பின்னர் ”மாற்றம்” என்ற முழக்கத்துடன் ஆட்சியைப் பிடித்தனர் தேசிய மக்கள் சக்தியினர். அதன் தலைவர் அநுரகுமார திசநாயக்க அரசுத் தலைவரானார். நடக்க இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கட்சியே பெரும்பான்மையைப் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அப்படியிருந்தும் தமிழ் மக்கள் விடயத்தில் இலங்கை அரசின் கொள்கை நிலைப்பாடு மாறாது என்பதை தேசிய மக்கள் சக்தி நேற்று அறிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான 5–0/1 தீர்மானத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீடிப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளைத் தீவிரமாக எதிர்க்கப்போவதாக அது அறிவித்துள்ளது. பதிலாக உள்நாட்டு விசாரணை நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாகவே, போர்க் குற்றங்களுக்காகவோ மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டமைக்காகவோ படையினர் எவரையும் தாம் தண்டிக்கப்போவதில்லை என்று அநுரகுமார திசநாயக்க தெரிவித்திருந்தார். உண்மைகளைக் கண்டறிவதற்காக மட்டுமே விசாரணைகள் நடத்தப்படும் என்று தெரிவித்திருந்தார்.

அப்படி உண்மைகளைக் கண்டறிவதற்காக நடத்தப்படும் விசாரணைகளும் வெறும் கண்துடைப்பாகவே இடம்பெறும் என்று தமிழ் மக்கள் நிச்சயமாக நம்புகின்றார்கள். ஏனெனில் அதுதான் இலங்கையின் வழக்கம், வரலாறு. தமிழர்கள் விடயத்தில் முன்னைய ஆட்சிகளின் கொள்கையையே தொடரும் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியில் விசாரணைகள் சுயாதீனமாகவும் நம்பகத்தன்மையுடனும் நடக்கும் என்கிற எதிர்பார்ப்பு தமிழர்களுக்கு இல்லை. தமிழர்களுக்கு உண்மை தெரியவேண்டிய அதேநேரம் நீதியும் கிடைக்கவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு. அந்த நீதி இலங்கையில் கிடைக்காது என்பதால்தான் அவர்கள் பன்னாட்டுச் சமூகத்தை நாடவேண்டியவர்களானார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் மூலம் குறைந்தபட்ச பரிகார நீதியாவது ஒரு சில கலப்புப் பொறுமுறைகளின் ஊடாகக் கிடைக்கும் என்று நம்பினார்கள்.

இப்போது, இலங்கையின் தமிழர் விரோதக் கொள்கையைத்தான் தேசிய மக்கள் சக்தியும் தொடரப்போகிறது என்கிற நிலையில் உள்நாட்டில் தமக்கு நீதி கிடைக்கும் என்று தமிழர்கள் நம்புவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. அதுவும் தண்டனை தரமாட்டோம் என்று முன்னரேயே தெரிவித்துவிட்ட ஓர் ஆட்சியில் நீதி கிடைக்கும் என்ற துளியளவு நம்பிக்கையும் கிடையாது.

அதனைஉறுதிப்படுத்துவதாகவேமனிதஉரிமைகள்பேரவையில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை கொழும்பு எதிர்க்கும் என்கிற தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடும் இருக்கின்றது. நீதி நிலைநாட்டப்படாமல் இலங்கையில் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கமும் அரசியல் தீர்வும் நிரந்தர அமைதியும் சாத்தியமற்றவை. அதைப் புரிந்தகொள்ளக்கூடிய ஆட்சியாளர்கள் கொழும்பில் அமரும்வரை தமிழர்களுக்கு உண்மையான மாற்றம் ஏற்படாது.

# மனமது செம்மையானால்...

**அருணன்**

உயிர்களை அறிவின் வழியாக வகைப்படுத்துவது தமிழ் மரபு. உணர்ந்து அறியக்கூடிய ஓரறிவு என்பதிலிருந்து தொடங்கி ஆறு அறிவுகள் கொண்டனவாக உயிர்கள் விளங்குகின்றன. புல்லும் மரமுமாக உடலால் உணர்தலின்வழி முதலறிவைப் பெறுகின்றன தாவரங்கள். நந்து எனப்படும் நத்தையும் முரள் எனப்படும் சங்கும் இவை போன்ற பிறவும் நா என்னும் புலனைக் கொண்டு ஈரறிவினைப் பெறுகின்றன. கறையானும்எறும்பும்மூக்கினைப் பெற்று மூன்று அறிவாக விளங்குகின்றன. இம்மூன்று புலன்களோடு கண்ணினைப் பெறுகின்ற நண்டுக்கும் தும்பிக்கும் நான்கு அறிவுகள் கிடைக்கின்றன.

அடுத்ததாகச் செவிப்புலனோடு ஐந்தறிவு பெற்றிருக்கக்கூடியவற்றுள்விலங்கும்விலங்கைப் போல விளங்கும் மனிதர்களும் (மாக்கள் என்ற பெயரில்) குறிக்கப் பெற்றிருக்கின்றன. மக்கள் அல்லாதவர்கள் மாக்களாம்.

அடுத்ததாக ஆறாவது அறிவு பெறுபவர் மக்கள் என்றால் அந்த ஆறாவது அறிவினை அறிகிற - உணர்கிற புலன் எது?

ஆறாவது அறிவினை அறியக்கூடிய புலன் மனமே. இந்த மனமில்லாத மக்கள் மாக்கள் என்று ஓரறிவு இறங்கி ஐந்தறிவில் நிற்கிறார்கள். மனத்தைவைத்தேமனிதன்மதிப்புப்பெறுகிறான். ஆறாவது அறிவினையும் உணர்கிறான்.

மனம் ஆறாவது புலனாக - ஏனைய புலன்களைஅடக்கியாளக்கூடியமிகுந்தவலிமை பொருந்தியதாகக் கருதப் பெறுகிறது. ஆனால் ஏனைய புலன்களைப் போல மனத்தை- அது எங்கே இருக்கிறது என்று அறிந்து கொள்ளுதல் கடினமே. ஏனைய உயிர்கள் தன்னிச்சையாக இயங்குகின்றஇயல்புடையனஎன்றால்மனிதன் மட்டும் சிந்தித்து முடிவெடுத்து இயங்கும் இயல்புடையவன்.

இந்த மனத்திற்குப் பல குணங்கள் இருந்தபோதும் இரக்கம் என்பதே மனித மனத்துக்கு முதன்மையான குணமாக அமைகின்றது. ஐந்தறிவு பெற்றிருக்கிற விலங்குகளுக்குமனமும்இரக்கமும்இல்லாததைப் போல மனிதராகப் பிறந்தும் மனமிருந்தும் இரக்கமில்லாதவர்களை விலங்குகளிலிருந்தும் தள்ளி அரக்கர்கள் என்கிறார் கம்பர்.

இதனை வாலி வாயிலாக இராமனிடம் கேட்க வைக்கிறார். அரக்கர் குலத்துக்கும் விலங்கினத்துக்கும் இடையில் இருக்கின்ற மனிதன் தன் மனத்தே இரக்கத்தை நழுவ விடலாமா? என்பதாக அமைகிறது அந்தக் கேள்வி.

”அரக்கர் ஓர் அழிவு செய்து.
கழிவரேல், அதற்கு வேறு ஓர்
குரக்கு இனத்து அரசைக் கொல்ல,
மனு நெறி கூறிற்று உண்டோ?
இரக்கம் எங்கு உகுத்தாய்? என்பால்.
எப் பிழை கண்டாய்? அப்பா!'

யாராவது அறியாமல் பிழை செய்கிறபோது, ”உனக்கு அறிவிருக்கி?” என்று கேட்பது இயல்பு. ஆனால், அறிந்து கொடுமை செய்கிறபோது ”உனக்குக் கொஞ்சமாவது மனத்தில் இரக்கம் இருக்கிறதா?” என்று கேட்பது வழக்கு. அறிவு செயல்கருதித்தோன்றுகின்றஎண்ணம். ஆனால் ஆறாவது புலனாகிய மனத்தின் வழியாகத் தோன்றுகிற இரக்கம் என்பது அறிவினும் மேம்பட்ட உணர்வின் வயப்பட்டது. ஆதலால் பல நேரங்களில் அறிவினை விடவும் மனிதர்கள் உணர்வுக்கே ஆட்பட்டுப் போகிறார்கள்.

மனத்தைக்கட்டுப்படுத்தக்கற்றுக்கொண்டால், அப்பயிற்சிதான் கல்வியாகிறது.‘சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்/ வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்” என்கிறாரே ஔவையார். இந்தமனப்பழக்கம்இல்லாதவர்கள் கற்க இயலாது. மனத்தைப் பழக்கும் கவனம் இன்றைக்கு மெல்ல மெல்ல மறைந்து வருகிறது. எண்ணங்களை ஒருசேரக் குவித்து மனமென்னும் புலனை மலரச்செய்வதல்லவோ கவனகக் கலை.

இந்த மனம்தான் மனிதனைத் தன்னுடைய விருப்பத்திற்கேற்பச் செயல்படத் தூண்டுகிறது. அதற்கு மற்ற புலன்களைத் துணை கொள்கிறது.

வாழ்வியலின் இருபெரும் பிரிவுகளான பேரறங்கள் மனத்தையே மூலமாகக் கொண்டிருக்கின்றன. இல்லறத்தார்க்கும் துறவறத்தார்க்கும் இந்த மனம்தான் பற்றுகோல். தலைவனும்தலைவியும்இணைந்துகொள்ளும் மணம் மனத்தின் விளைவுதானே. அதற்கு அகம் என்ற அழகிய பெயருண்டு. துறவியர் ஒடுங்கும் தவத்தின் நோக்கம் மனத்தின் ஆழம் உணர்தல்தானே.

ஆனால் தேடிக் கண்டடைய முடியாததாகவும் கண்டடைந்தவர் விண்டுரைக்க இயலாததாகவும் திகழ்கின்ற இந்த மனத்தை எதற்கெல்லாம் ஞானியர் ஒப்புமைப்படுத்துகிறார்கள்? சிலர் அதைக்குரங்கென்று குட்டுவார்கள். பலர் அதனை இறைவனுக்கு வாகனமாக்கிப் போற்றுவார்கள். கோயிலாக்கிக் கொண்டாடுவார்கள். குட்டிச் சுவரென்றும்எட்டிஉதைப்பார்கள். பேயென்பாரும் உளர். தாயென்பாரும் உளர். அது அவரவர் மனத்தின் போக்கு.

உயிர்ப் படைப்பில் மனிதனுக்கு மட்டும் வாய்த்திருக்கிற மனம் மிக அற்புதமான புலன். அதன் பெருமையறியாதவர்களும் அதனை முறைப்படப்பயன்கொள்ளத்தெரியாதவர்களுமே மனத்தைப் பழிப்பர். அதன் பெருமையுணர்ந்து அனுபவித்தோர் போற்றுவர்.

இந்த மனத்தால் இயலாதது யாதொன்றுமில்லை. எதனையும்விஞ்சக்கூடியது ஊழ். மற்றொன்று சூழினும் தான்முந்துறும் தன்மை மிக்கது. அந்த ஊழையும் உப்பக்கம் காணும் வல்லமை, மனத்தைச் சோர விடாதவர்க்கே உண்டு. மனம் ஊழினையும் வெல்லும் வலிமையைத் தருகிறது என்று வென்று காட்டியோரும் உளர்.

''மிகுந்த செல்வம் இல்லாததனால் - உலகத்தில் பலவிதமாகிய இழிவான இன்பங்கள் மட்டுமல்ல, உயர்ந்த இன்பங்கள்கூடப் பெறுவதற்குத் தடை ஏற்படுகிறதே!'' என்று பாரதியார் எண்ணியபொழுது, அவருடைய மனம் இப்படிச் சொல்கிறது; ''மூடா, ஸகல மனிதர்களிடத்திலும், ஈசன் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக்கின்றார். அது விரும்பிய திசைகளுக்கெல்லாம் போய், விரும்பிய காட்சிகளையெல்லாம் பார்த்து வரக்கூடிய வல்லமை உடையது; அதைப் பயன்படுத்தி இன்பமடையாமல் எந்த நிமிஷத்திலும் உன்னைக் கீழே தள்ளித் தீங்கு செய்யக் கூடியதாகிய இழிய மர வண்டியிலே ஏன் விருப்பம் கொள்கிறாய்?'' என்று. உடனே அந்த மனத்தையே தேரோட்டியாகக் கொண்டு, ஞானத்தையே ரதமாக்கிப் பல லோகங்களுக்கும் பயணித்த அனுபவத்தைப் பதிவிட்டிருக்கிறார் பாரதியார்.

புறத்தே காணும் உலகம் வேறு. மனத்தே காணும் உலகம் வேறு. நாம் ஒளியைத்தான் மிக வேகமானது என்கிறோம். ஆனால் எதனினும் வேகமானது மனம். அதனால்தான் ‘மனோவேகம்’ என்றே பெயர் அமைந்தது. நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மையால் விளைவதைப் போல, மனமும் நாம் நாடுகிற விதத்தைப் பொறுத்தே நமக்கு நன்மையையும் தீமையையும் வழங்குகிறது.

எந்தச் சாட்சிகளும் உணர்த்த முடியாத குற்றத்தின் அழுத்தத்தையும் குற்றமில்லாத பரிசுத்தத்தையும் ஒருசேர அளிப்பது மனச்சாட்சிதான். எந்தச்சாட்சிக்கும்அஞ்சாதவர்கள் ஒருகாலத்தில் மனசாட்சிக்காவது அஞ்சினார்கள். பிறர் கூறுவதை எளிதாகப் புறந்தள்ளி விடக்கூடியவர்களுக்குத் தன்னெஞ்சறிவது பொய்யில்லைஎனநன்றாகத்தெரியும். அப்படியே பொய்த்த பின்னாலும் தன்னெஞ்சே தன்னைச் சுடும் வெம்மை நிறைந்ததாகி விடுகிறதே.

''நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்'' என்றும், ''மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்” என்றும் உலகநாதர் உரைப்பது கேளீரோ! மனக்கோட்டம் தீர்ப்பதுதானே நூலின் மாண்பு.

அவ்வழியாக, மனிதனின் மாண்பினை அளவிடும் கருவியாகவே நம் முன்னோர் மதித்திருந்தனர். அதனால்தான் மனம்போல்

தொடர்ச்சி 5ம் பக்கம்...........

காலைக்கதிர் Kalaikkathir

# மனமது செம்மையானால்...

4ம் பக்க தொடர்ச்சி...........

வாழ்வு அமைந்தது.

இந்த மனத்தை ஒரு தோணிபோலப் பற்றிக்கொண்டு மதியினைக் துடுப்பாக்கித் தள்ளியபடி அத்தோணியிலே சினமென்னும் சரக்கினையும் ஏற்றிப் பிறவியாகிய ஆழ்கடலைக் கடக்க நினைக்கின்றபோது மனன் என்னும் காமம் பாறையாக நின்று தாக்குகிறது. மனமான தோணி உடைந்து கவிழும் நிலை எய்தும்போது அறியமுடியாத உன்னை - அதாவது அறிவால் உணர்ந்து கொள்ள முடியாத இவ்வுலக இயல்பினை மனத்தின் மூலமாக எழுகின்ற உணர்வினால் உணர வேண்டும் என்று மனத்தையே கருவியாக்குகிறார்கள் ஞானியர். ஆறாவது அறிவினைக் கடந்து ஏழாம் அறிவினைப் பெறுவதற்கு மனிதர்க்கு உதவும் கருவி இந்த மனம் என்பது அதன் உட்பொருள். இதனைத் திருவள்ளுவர்,

‘ஐயப் படாஅது அகத்தது உணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்’ என்று குறிப்பிட்டுக் காட்டுகிறார்.

மனத்தை வசப்படுத்தியவருக்கு யாவும் வசமாகும். மனத்தைக்கட்டுக்குள்கொண்ட அந்நிலை ‘சித்தித்தல்’ எனப் பெயர் பெறுகிறது. மனத்தின் மேம்பட்ட அறிவினைச் ‘சித்தி பெறுதல்’ என்று அறிஞர்கள் போற்றி அழைக்கின்றனர். இது இறைநிலைக்கு ஒப்பானது என்பது உறுதி.

இன்றைய சூழலில் உடற்பிணியால் உழல்வோரை விடவும் மனப்பிணியால் வாடுவோரே மிக அதிகம். மனத்தின் அழுத்தங்களும் கீழுணர்ச்சிகளும் உடலைப் பற்றி அறிவினை மழுங்கச் செய்து ஆயுளைக் குறைத்து விடுகின்றன. இரக்கத்தை இழந்து ஆறறிவிலிருந்து இறங்கி ஐந்தறிவுக்குச் செல்வதே வழக்கமாயிருக்கிறது. ஆனால் மனத்தினை அடக்கக் கற்றோருக்குச் சாவாநிலை என்னும் ஏழாவது அறிவின் உயர்வு சித்திக்கும். இதற்கான வழியாகத் தமிழ்ப் பாடல் இப்படிக் கூறுகிறது.

‘மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டா
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டா
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டா
மனமது செம்மையானால் மந்திரம் செம்மையாமே’

மனச்செம்மை உடைய மனிதர்கள் வாழ்கின்ற உலகத்தில் குற்றங்களுக்கும் குறைகளுக்கும் இடமில்லை. எனவே மனத்தைச் செம்மை செய்யத் தொடங்குவோம்.

# கட்டுமரம் கவிழ்ந்தமையால் கடற்தொழிலாளி யாழில் சாவு

யாழ்ப்பாணத்தில் கட்டுமரம் கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் கடற்தொழிலாளி ஒருவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தும்பளை லூதர் மாத கோவிலடியை சேர்ந்த 69 வயதுடைய திருச்செல்வம் ஞானப்பிரகாசம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

தனது கட்டுமரத்தில் கடற்தொழிலுக்காக கடலுக்குள் சென்ற வேளை கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் , அவர் கடலில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சடலம் சக தொழிலாளிகளால் மீட்கப்பட்டு, உடற்கூற்று பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (05)

# மாற்றுத்திறனாளிகளை தொழில் வாய்ப்புக்கு உள்வாங்க திருமலையில் மீளாய்வுக் கூட்டம்



மாற்றுத்திறனாளிகளை தொழில்வாய்ப்புக்கு உள்வாங்கல் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு கூட்டம் திங்கட்கிழமை திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஜெசிக்கா திட்டத்தின் பணிப்பாளர் திருகோணமலை மாவட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக பாராட்டுக்களை தெரிவித்ததுடன் மாவட்ட அரசாங்க அதிபரும் இத் திட்டத்திற்கு மிகுந்த ஒத்துழைப்பு வழங்கியுள்ளமைக்கு நன்றிகளையும் இதன்போது தெரிவித்துக் கொண்டார்.

மேலும், இத்திட்டத்தில் உள்ள சவால்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலத்தில் மாற்றுத்திறனாளிகளை தொழில் வாய்ப்புக்கு உள்வாங்கும் போது பெண்களையும் விகிதாசார அடிப்படையில் சேர்க்க வேண்டும் எனவும் கூறப்பட்டது.



இதன்போது மாவட்ட இணைப்பாளர் சமூக சேவை உத்தியோகத்தர், மாவட்ட இணைப்பாளர் மனித வள அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமூக சேவை திணைக்களத்தின் சமூக சேவை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.(05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்
பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்
தொடர்புகளுக்கு: 0777 43 5557
5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd


காலைக்கதிர் Kalaikkathir

அனைத்து அரசியல் கட்சிகளும்

# வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பை பெண்களுக்கு வழங்குமாறு கபே அமைப்பு கோரிக்கை



பல ஆண்டுகளாக அரசியலில் ஈடுபட்டு வரும் மூத்த அரசியல்வாதிகள் இந்த ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளனர். எனவே, ஒவ்வொரு அரசியல் கட்சியிலிருந்தும் வேட்புமனுக்களை கையளிக்கும் போது பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு கணிசமான இடத்தை வழங்குமாறு அனைத்து அரசியல் கட்சிகளிடமும் கபே அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்த காலங்களில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்ட சிலர் மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் தமது கடமையை சரியாக செய்யவில்லை என்பதை அவதானித்துள்ளோம்.

மேலும், மக்கள் அந்தந்த கட்சியால் வேட்புமனுவில் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மக்கள் தங்கள் விருப்பத்தை தெரிவிக்கின்றனர்.

எனவே, அனைத்து அரசியல் கட்சிகளும் தமது கட்சி பிரதிநிதிகளை தெரிவு செய்யும் போது பொதுமக்களால் குற்றம் சுமத்தப்பட்டவர்களை தெரிவு செய்யாமல் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் கணிசமான வாய்ப்பை வழங்குவதற்கு முன்வர வேண்டுமென கபே அமைப்பின் நிர்வாக பணிப்பாளர் சுரங்கி ஆரியவன்ச கேட்டுக்கொள்கிறார்.

ஊடகங்களுக்கு திங்கட்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது –

இந்நாட்டில் பெரும்பான்மையான வாக்காளர்கள் பெண்களாகவே காணப்படுகின்றனர். அந்த வகையில் குறிப்பாக அவ்வீதம் நீண்டகாலமாக 50 வீதம் முதல் 52 வீதம் வரையில் காணப்படுகிறது.

ஆனால், இந்நாட்டு வரலாற்றில் பெண்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் 6 வீதத்தினை விட அதிகரிக்காமல் இருப்பது வருத்தமளிக்கிறது. இதன் காரணமாக ஜனநாயகத்தை மதிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளும் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டுமென கபே அமைப்பு கேட்டுக்கொள்கின்றது.(05)

# பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளை உடைத்து சொத்துக்கள் திருடிய குற்றத்தில் இருவர் கைது

பாணந்துறை பகுதியில் பொலிஸ் அதிகாரிகளின் வீடுகளை உடைத்து சொத்துக்களை திருடிய குற்றத்திற்காக தேடப்பட்டு வந்த இரண்டு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை, ஹொரேதுடுவ பிரதேசத்தில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, சந்தேக நபர்களிடம் இருந்து 10 கிராம் 220 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, திருடப்பட்ட சில தங்க நகைகளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இந்த தங்க நகைகளை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மற்றுமொரு சந்தேக நபரும் பெண் சந்தேக நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் கெசல்வத்த, கரந்தெனிய மற்றும் மொரட்டுவ பிரதேசங்களை சேர்ந்தவர்கள் என விசாரணையில் தெரியவந்துள்ளது.(05)

# குடும்பத் தகராறு காரணமாக கணவன் சாவு; மனைவி கைது

நொச்சியாகம, வல்பலகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் குடும்பத் தகராறு காரணமாக கணவன் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. நொச்சியாகம, வல்பலகம பிரதேசத்தைச் சேர்ந்த 38 வயதுடைய கணவனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

சம்பவத்தன்று உயிரிழந்த கணவன் மது போதையில் தனது மனைவியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது, மனைவி உயிரிழந்த கணவனின் வாயை துணியால் கட்ட முற்பட்ட போது கணவன் மயக்கமடைந்துள்ளார்.

இதனையடுத்து, மயக்கமடைந்த கணவன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் கணவன் ஏற்கனமே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மனைவி சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த கணவன் மதுபோதையில் மனைவியுடன் அடிக்கடி வாக்குவாதத்தில் ஈடுபடுடனர் எனவும் அயல் வீட்டார்களை தகாத வார்த்தைகளால் திட்டுவதாகவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலமானது நொச்சியாகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நொச்சியாகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ண சூரிய குருணாகல் ஜும்ஆ பெரிய பள்ளிக்கு வருகை





வடமேல் மாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ண சூரிய குருணாகல் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்டார்.

இதன்போது, பள்ளிவாசலின் மௌலவி ரிஸ்வி மற்றும் உள்ளிட்ட சமய தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார்.

மக்களுக்கு சமய வேறுபாடுகளின்றி சிறந்த சேவையை வழங்குவதே நோக்கமாகும் என்று ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய அங்கு தெரிவித்தார்.

இதன் போது குருநாகல் மாவட்ட செயலகத்தின் பௌத்த பிரிவின் ராகம சுகானந்த ஹமி மற்றும் வடமேல் மாகாண செயலாளர் இந்திக இலங்ககோன் ஆகியோர் கலந்து கொண்டனர். (05)

# ஓடையில் தவறி வீழ்ந்து 4 வயது சிறுமி இறப்பு

தங்கொட்டுவ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வேகட பிரதேசத்தில் அமைந்துள்ள வீடொன்றின் பின்புறத்தில் உள்ள ஓடையில் தவறி வீழ்ந்து சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என தங்கொட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கொட்டுவ, வேகட பிரதேசத்தைச் சேர்ந்த நான்கு வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

உயிரிழந்த சிறுமி முன்பள்ளிக்குச் சென்று மீண்டும் வீடு திரும்பியுள்ள நிலையில் சிறுமியின் பாட்டி, சிறுமியைக் குளிப்பாட்டுவதற்காக நீரை ஆயத்தம் செய்து கொண்டிருந்துள்ளார்.

இதன்போது, இந்த சிறுமி வீட்டின் பின்புறத்திற்குச் சென்றுள்ள நிலையில் ஓடையில் தவறி வீழ்ந்து நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தங்கொட்டுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(05)

# நிதி மோசடியில் ஈடுபட்ட 19 சீன பிரஜைகள் கைது

இணையம் ஊடாக மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடி தொடர்பில் 19 சீன பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் நாவல பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர். (05)

# மதுவரி திணைக்களத்துக்கு புதிய ஆணையாளர் நாயகம்

மதுவரி திணைக்களத்தின் புதிய ஆணையாளர் நாயகமாக யு.டி.என் ஜயவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

மதுவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகமாக கடமையாற்றிய எம்.ஜே.குணசிறியின் பதவி காலம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நிறுத்தப்பட்டது.

இதனையடுத்து, பதில் மதுவரி ஆணையாளர் நாயகமாக யு.டி.என் ஜயவீரவை நியமிக்க நிதியமைச்சராக ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.(05)

# பிரான்ஸுக்கு அனுப்பி வைப்பதாக யாழ்.இளைஞனிடம் பண மோசடி

பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞனிடம் 15 இலட்ச ரூபாவை மோசடி செய்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தன்னை பிரான்ஸ் நாட்டுக்கு அனுப்பி வைப்பதாக கூறி முதல் கட்டமாக 15 லட்ச ரூபா பணத்தைப் பெற்ற பின்னர், வெளிநாட்டுக்கு அனுப்புவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காது தன்னை ஏமாற்றி விட்டதாக இளைஞன் ஒருவர் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவில் முறைப்பாடு செய்துள்ளான்.

முறைப்பட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் வெளிநாடு அனுப்பி வைப்பதாக கூறி மோசடியில் ஈடுபட்ட குற்றத்தில் பருத்தித்துறை பகுதியை சேர்ந்த நபரை கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த பின்னர் திங்கட்கிழமை நீதிமன்றில் முற்படுத்திய போது , இளைஞனிடம் பெற்றுக்கொண்ட பணத்தில் ஒரு தொகையை செவ்வாய்க்கிழமை மீள கையளிப்பதாகவும் , மிகுதி பணத்தினை மிக விரைவில் மீளளிப்பதாக மன்றில் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து அவரை பிணையில் செல்ல மன்று அனுமதித்தது. (05)

# இதுவரையான காலப்பகுதிக்குள் இவ்வருடம் 277 யானைகள் இறப்பு

*இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 277 யானைகள் உயிரிழந்துள்ளார் என வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*கடந்த 2023 ஆம் ஆண்டில் 488 யானைகள் உயிரிழந்துள்ளன.*

*அதிகளவான யானைகள் பயிர்களை பாதுகாப்பதற்காக காணிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்சார கம்பிகளில் சிக்கி மின்சாரம் தாக்கி உயிரிழப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*எனவே, காணிகளில் சட்டவிரோதமாக பொருத்தப்பட்டுள்ள மின்சார கம்பிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.(05)*

# நாடாளுமன்ற தேர்தல் தபால்மூல வாக்களிப்பு விண்ணப்பங்களுக்குக் கால அவகாசம் நீடிப்பு

எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தபால்மூலம் வாக்களிப்பிற்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் கால அவகாசம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதியிலிருந்து ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி, நேற்று நள்ளிரவு 12 மணிக்கு முதல் தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது.

இந்நிலையில், தபால்மூலம் வாக்களிக்கவுள்ள வாக்காளர்களின் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் காலவகாசம் ஒக்ரோபர் 10 ஆம் திகதி நள்ளிரவு 12 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

## சட்டவிரோத மதுபானத்துடன் நீர்கொழும்பில் ஒருவர் கைது

நீர்கொழும்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தலுபொத்த பகுதியில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக நீர்கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 44 வயதுடைய நீர்கொழும்பு, தலுபொத்த பகுதியைச் சேர்ந்தவர் ஆவார்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 57 லீற்றர் 750 மில்லி லீற்றர் சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நீர்கொழும்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## பிணைகள் பரிவர்த்தனை ஆணை குழுவுக்கு புதிய தலைவர் நியமிப்பு



இலங்கையின் பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் புதிய தலைவராகப் பேராசிரியர் ஹரேந்திர திசாபண்டார நியமிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் நிதி மற்றும் கூட்டக நிறுவன ஆளுகையின் பேராசிரியரான இவர் 2012 ஆம் ஆண்டில் இலங்கை பிணைகள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பொது பணிப்பாளராகக் கடமையாற்றியுள்ளார்.

மேலும், இவர் 2008 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதி சேவைகள் கழகத்தின் பணிப்பாளராகவும் மூலதன சந்தை கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.

(05)



# கண்டி - கொழும்பு பிரதான வீதியில் விபத்து ; பாடசாலை மாணவர் உட்பட நால்வர் காயம்







கண்டி - கொழும்பு பிரதான வீதியில் நெலும்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.


இந்த விபத்து திங்கட்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் ஏற்றிச் சென்ற பௌஸர் ஒன்று பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்றின் பின்புறத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின் போது, பஸ்ஸில் பயணித்த இரு பாடசாலை மாணவர்களும் பௌஸரின் சாரதியும் உதவியாளரும் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக கேகாலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)

## பதில் பொலிஸ்மா அதிபர் நியமனத்திற்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம்



சிரேஸ்ட பிரதிபொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை பதில்பொலிஸ்மா அதிபராக நியமிக்கும்ஜனாதிபதியின்முடிவிற்கு அரசமைப்பு பேரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதிஅனுரகுமாரதிசநாயக்க கடந்த மாதம் 27 ஆம் திகதி அரசமைப்பின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பயன்படுத்திசிரேஸ்டபிரதிபொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவை பதில்பொலிஸ்மா அதிபராக நியமித்தார்.

அன்றையதினமேஜனாதிபதியின் செயலாளர் நியமனக்கடிதத்தை வழங்கியிருந்தார்.

இந்த நிலையில் நேற்று அரசமைப்பு பேரவை இந்த நியமனத்திற்குதனதுஅங்கீகாரத்தை வழங்கியுள்ளது.(05)

## சட்டவிரோத மதுபானத்துடன் கந்தானையில் ஒருவர் கைது

கந்தானை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹபுகொட பிரதேசத்தில் சட்டவிரோத மதுபானத்துடன் சந்தேக நபர் ஒருவர் திங்கட்கிழமை மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத்தடுப்புபிரிவினருக்குகிடைத்தஇரகசிய தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கந்தானை ஹபுகொட பிரதேசத்தைச் சேர்ந்த 56 வயதுடையவர் ஆவார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 41 லீற்றர் 250 மில்லி லீற்றர் (55 போத்தல்கள்) சட்டவிரோத மதுபானம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேல் மாகாணத்தின் வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவினர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(05)



காலைக்கதிர் Kalaikkathir

# கடை ஒன்று எரிந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள்

## முல்லைத்தீவு, சிலாவத்தையில்



முல்லைத்தீவு சிலாவத்தை பகுதியில் கடை ஒன்று எரிந்த சம்பவம் நேற்று (செவ்வாய்க்கிழமை) அதிகாலை இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவு சிலாவத்தை சந்தைக்கு முன்பாக அமைந்துள்ள பலசரக்கு கடை ஒன்றும் அதனுடன் இருந்த களஞ்சியசாலை ஒன்றும் தீயில் எரிந்துள்ளது.

இதன்போது குறித்த வீதிவழியாக சென்ற அரச பஸ் சாரதி, நடத்துநர் இதனை அவதானித்து அயல்வீட்டினரின் உதவியுடன் தீயை கட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

இருப்பினும் பல இலட்சமான பொருள்கள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதுடன் இது திட்டமிட்ட செயற்பாடா அல்லது மின்னினால் ஏற்பட்ட தீயா என பல கோணங்களில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அத்தோடு, மின்சார சபையினர், தடயவியல் பொலிஸார் இணைந்து மேலதிகசோதனைநடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாகஇதன்போது பொலிஸார் தெரிவித்திருந்தனர்.(05)



# வகுப்பிற்குச் சென்று வீடு திரும்பிய மாணவியின் தங்கநகை கொள்ளை

## முள்ளியவளையில் சம்பவம்

முல்லைத்தீவு, முள்ளியவளை நகர் பகுதியில் வீதியில் வைத்து மாணவி ஒருவரின் தங்க நகை அறுக்கபட்ட சம்பவம் ஒன்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளதாக முள்ளியவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வட்டுவாகல் பகுதியில் இருந்து முள்ளியவளை நகரிற்கு வகுப்பிற்காக உயர்தரமாணவிஒருவர்சென்றுள்ளார்.

குறித்த மாணவி வகுப்பை முடித்து விட்டு பஸ் நிலையம் நோக்கி நடந்து சென்ற போது முள்ளியவளை பிராந்திய சுகாதார சேவைகள்திணைக்களத்திற்கு முன்பாக மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் மாணவி கழுத்தில் அணிந்திருந்த தங்க நகையை பறித்துக்கொண்டுதப்பிசென்றுள்ளனர்.

இதனையடுத்து குறித்த மாணவியால் முள்ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டதையடுத்து மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார்மேற்கொண்டுவருகின்றனர்.(05)

# கல்முனை பிரதேச செயலாளர் இலங்கை நிர்வாக சேவை விசேட தரத்திற்கு உயர்வு



*(சர்ஜுன் லாபீர்)*

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி அவர்கள் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சால் நடத்தப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கான நேர்முகத் தேர்விற்கு தோற்றி பொதுச் சேவைகள் ஆணைக்குழுவால் 2024.07.01ஆந் திகதி தொடக்கம் இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

இலங்கை நிர்வாக சேவை முதலாம் தரத்தைச் சேர்ந்த ஜே.லியாக்கத் அலி காரைதீவு,சம்மாந்துறை பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும்,ஓட்டமாவடி, அட்டாளைச்சேனை ஆகிய பிரதேசசெயலகங்களில் பிரதேச செயலாளராகவும்,கல்முனை மாநகர சபையில் ஆணையாளராகவும் கடமையாற்றியுள்ளார்என்பதும் குறிப்பிடத்தக்கது.(05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.10.2024இல் வெளியிடப்பெற்றது